கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:- திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2022**

அதன்

**அசல் வழக்கு எண்.311/2022**

(CNR No. TNTL-1D-000897-2022)

மரியரத்தினம் … மனுதாரர்/ வாதி

..எதிர்..

1. கே.பி. பரத்சிங்
2. எஸ். முத்துப்பாண்டியன் … எதிர்மனுதாரர்கள்/ 1 ஆம் பிரதிவாதி மற்றும் உத்தேச 2 ஆம் பிரதிவாதி

இந்த இடைநிலை மனுவானது 08.08.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.எஸ். முருகேசன் அவர்களும், 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி. ஐயப்பன் அவர்களும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை விதி1 0(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ், இந்த மனுவின் 2 வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 2 ஆம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள உத்தரவிடக்கோரியும், அதனை அனுசரித்து அசல் வழக்கில் 2 வது எதிர்மனுதாரர் பெற்ற மோசடி கிரைய ஆவணத்தை ரத்து செய்துகொள்ளவும், மனுதாரரின் அனுபவத்திற்கு இடையூறு செய்யாமல் இருக்கவேண்டி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவும் அனுமதி அளிக்க உத்தரவிடக்கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இம்மனுவின் மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி இந்த மனுதாரரால், 1 வது எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு சம்பந்தமான கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தபசில்

சொத்துக்களை 1வது எதிர்மனுதாரர், மனுதாரர் வசம் ஒப்படைத்துள்ளார். அதன்பேரில் மனுதாரர் தபசில் சொத்துக்களில் ரூ.25,00,000/- செலவு செய்து சீரமைத்து அனுபவித்து வருகிறார். இந்நிலையில், தபசில் சொத்துக்களுக்கு அருகாமையில் உள்ள 2வது எதிர்மனுதாரர், தபசில் சொத்துக்களை அடைந்துவிட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில், 1வது எதிர்மனுதாரருடன் நயவஞ்சகக் கூட்டு சேர்ந்துகொண்டு, மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்கனவே ஏற்பட்டுள்ள தாவா கிரைய ஒப்பந்ததை மறைத்து, 1வது எதிர்மனுதாரர், தபசில் சொத்துக்களைப் பொறுத்து 19.01.2022 ஆம் தேதியன்று, 2வது எதிர்மனுதாரருக்கு கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். எனவே 2வது எதிர்மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசியக் கட்சி ஆவார். எனவே 2வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 2ஆம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ளவும், அசல் வழக்கில் மேற்படியார் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தை ரத்து செய்து கொள்ளவும், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவும் உத்தரவிட வேண்டி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுச் சங்கதிகள் உண்மையானவைகள் கிடையாது. அசல் வழக்கே காலவரம்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 2வது எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசியக்கட்சி இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அசல் வழக்கில் மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தின்படி மனுதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் கிரையம் முடிக்கத் தவறிவிட்டார். எனவே மேற்படி ஒப்பந்தமானது 30.10.2019 ஆம் தேதியன்றே ரத்தாகிவிட்டது. அதன்பின்னர் 2வது எதிர்மனுதாரருக்கு, 1வது எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களை 19.01.2022 ஆம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்திருக்கிறார். மனுதாரருக்கு தபசில் சொத்துக்களில் எவ்வித உரிமையும் கிடையாது. தற்போது தபசில் சொத்துக்களானது 2வது எதிர்மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது.

4. **<u>2வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. மனுச் சங்கதிகள் உண்மையானவைகள் கிடையாது. அசல் வழக்கிற்கு 2வது எதிர்மனுதாரர் அவசியக் கட்சி கிடையாது. 2வது எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களைப் பொறுத்தும் அவரது மற்ற சொத்துக்களைப் பொறுத்தும் அவரது குமாரரான விஜயபாண்டியன் என்பவருக்கு 24.02.2023 ஆம் தேதியன்று உரிமை மாற்றம் செய்து கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்டார். எனவே மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

6. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

7. **பிரச்சனைக்கான தீர்வு**:-

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி இந்த மனுதாரரால், 1வது எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கு சம்பந்தமான கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தபசில் சொத்துக்களை 1வது எதிர்மனுதாரர், மனுதாரர் வசம் ஒப்படைத்துள்ளதாகவும், அதன்பேரில் மனுதாரர் தபசில் சொத்துக்களில் ரூ.25,00,000/- செலவு செய்து சீரமைத்து அனுபவித்து வருகிற நிலையில், தபசில் சொத்துக்களுக்கு அருகாமையில் உள்ள 2வது எதிர்மனுதாரர், தபசில் சொத்துக்களை அடைந்துவிட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில், 1வது எதிர்மனுதாரருடன் நயவஞ்சகக் கூட்டு சேர்ந்துகொண்டு, மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்கனவே ஏற்பட்டுள்ள தாவா கிரைய ஒப்பந்ததை மறைத்து, 1வது எதிர்மனுதாரர், தபசில் சொத்துக்களைப் பொறுத்து 19.01.2022 ஆம் தேதியன்று, 2வது எதிர்மனுதாரருக்கு கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், எனவே 2வது எதிர்மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசியக் கட்சி ஆவார் என்பதால், 2வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 2ஆம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ளவும், அசல் வழக்கில் மேற்படியார் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தை ரத்து செய்து கொள்ளவும், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவும் உத்தரவிட வேண்டியது அவசியமானது என்று வாதிட்டிருக்கிறார்.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தின்படி மனுதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் கிரையம் முடிக்கத் தவறிவிட்டதாகவும், எனவே மேற்படி ஒப்பந்தமானது 30.10.2019 ஆம் தேதியன்றே ரத்தாகிவிட்டதாகவும், அதன்பின்னர் 2வது எதிர்மனுதாரருக்கு, 1வது எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களை 19.01.2022 ஆம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி கிரையத்தை அனுசரித்து, 2வது எதிர்மனுதாரர் தபசில் சொத்துக்களைப் பொறுத்தும் அவரது மற்ற சொத்துக்களைப் பொறுத்தும் அவரது குமாரரான விஜயபாண்டியன் என்பவருக்கு 24.02.2023 ஆம் தேதியன்று உரிமை மாற்றம் செய்து கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்டதாகவும், எனவே 2வது எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசியக்கட்சி இல்லை என்றும் வாதிடப்பட்டுள்ளது.

9. இரு தரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தின்பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது எதிர்வழக்குரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில் மனுதாரர்/வாதியால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட 30.10.2019 ஆம் தேதிய கிரைய ஒப்பந்தமானது நிலுவையில் உள்ள சமயத்தில், 1வது எதிர்மனுதாரர் தபசில்

சொத்துக்களைப் பொறுத்து, 2 வது எதிர்மனுதாரருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதால், 2 வது எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசியத் தரப்பார் என்ற கூற்றினைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், 1 வது எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட 30.10.2019 ஆம் தேதிய கிரைய ஒப்பந்தமானது காலாவதியாகிவிட்டதால் தான் 2 வது எதிர்மனுதாரருக்கு தபசில் சொத்துக்களைப் பொறுத்து 19.01.2022 ஆம் தேதியன்று கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும், 2 வது எதிர்மனுதாரர் இந்த தபசில் சொத்துக்களைப் பொறுத்து, அவரது குமாரரான விஜய பாண்டியன் என்பவருக்கு ஏற்பாடு ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டதால் தபசில் சொத்துக்களின் அனுபவம் தற்போது 2 வது எதிர்மனுதாரர் வசம் இல்லை என்பதால் 2 வது எதிர்மனுதாரர் அவசியத் தரப்பார் இல்லை என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டிருந்தாலும், அசல் வழக்கின் தபசில் சொத்துக்களைப் பொறுத்த நடவடிக்கைகளில் 2 வது எதிர்மனுதாரரும் ஈடுபட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரருக்கும், 1 வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட 30.10.2019 ஆம் தேதிய கிரைய ஒப்பந்தம் மற்றும் 1 வது எதிர்மனுதாரருக்கும், 2 வது எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் ஆகியவை குறித்து அசல் வழக்கில் இரு தரப்பினரின் முழுமையான விசாரணைக்குப் பின்னர் தான் முழுமையான தீர்வு காண இயலும் என்பதாலும், தபசில் சொத்துக்களைப் பொறுத்த நடவடிக்கைகளில் 2 வது எதிர்மனுதாரரும் ஈடுபட்டுள்ளது தெரியவருகிற காரணத்தாலும் தற்போதைய சூழ்நிலையில் இந்த மனு அனுமதிக்கக் கூடிய ஒன்றே என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருந்தபோதிலும், மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் 2 வது எதிர்மனுதாரர் பெற்ற மோசடி கிரைய ஆவணத்தை ரத்து செய்துகொள்ளவும், மனுதாரரின் அனுபவத்திற்கு இடையூறு செய்யாமல் இருக்கவேண்டி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவும் இந்த மனுவில் அனுமதி கோரப்பட்டுள்ளது. கட்டளை 1 விதி 10(2) உ.விமுச பிரிவின்படி புதிதாக ஒருவரை அசல் வழக்கில் கட்சியாக சேர்க்க கோரலாமே தவிர மேற்படி பிரிவின் கீழ் அசல் வழக்கின் பிராது பரிகாரத்தை சீர்திருத்தம் செய்யக் கோர இயலாது. மேற்கண்ட பரிகாரங்களைப் பொறுத்து மனுதாரர் தனியாக உரிய பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்து தான் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டுமென்றும், எனவே இம்மனுவினை பகுதியாக அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. இம்மனுவின் 2 வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் உத்தேச 2 ஆம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொண்டு வழக்கை நடத்திட அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இதர பரிகாரங்களைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாளான இன்று இந்நீதிமன்றத்தால் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) எஸ். மனோஜ்குமார்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**

இல்லை

(ஒம்) எஸ். மனோஜ்குமார்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

இடைநிலை மனு எண்.1/2022

அதன்

அசல் வழக்கு எண்.311/2022

உத்தரவு (நேரிய)

நாள்: 20.08.2024

---